வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் இருபாலர் பயிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பதற்கான இடம், கட்டடம், விளையாட்டு மைதானம் உள்ளிட்ட அனைத்தும் தயார் நிலையில் உள்ளது. அதையும் இந்த ஆண்டே அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள், விவசாயிகள் பாம்பு கடித்து இறக்கும்பொழுது, உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அந்தத் தொகையை 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு அமருகிறேன்.

(ஆஏ) திருவையாறு தொகுதி, திருப்பாளனம் கிராமம், மின்சாரம் தாக்கி உயிரிழந்த மற்றும் சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு நிவாரணம்

(ஆஐ) செஞ்சி, சூரப்பன்தாங்கல் கிராமம், மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம்

(ஆஒ) பொள்ளாச்சி, மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம், கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குதல், உழவர் பாதுகாப்புத் திட்ட நிவாரணத் தொகையை உயர்த்துதல்

—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருப்பாளனம் ஊராட்சியைச் சேர்ந்த திரு. கலியபெருமாள் என்பவரின் மகன் திரு. செந்தில்குமார் என்பவர் கடந்த 12–7–2017 அன்று கோயிலில் பந்தல் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியும், விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர்*